## சுருக்கம்

வேளாண்மைத் துறை – தோட்டக்கலை (ம) மலைப் பயிர்கள் துறை – மோட்டார் வாகனம் – அறிவிப்புகள் – 21 புதிய வாகனங்களில் 15 வாகனங்களுக்கு ஆணை வழங்கப்பட்டது – மீதமுள்ள 6 புதிய வாகனங்கள் வாங்க வழங்கப்பட்டுள்ள தொகை ரூ.38,70,966/–ஐ காட்டிலும் கூடுதலாக ஆகும் செலவினம் ரூ.56,856/–ஐ ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மை(தோக1)துறை

அரசாணை(நிலை) எண்.226

நாள் 28.07.2016
திருவள்ளுவர் ஆண்டு 2047
துன்முகி–ஆடி –13

படிக்க:–

1. அரசாணை(நிலை) எண்.64, வேளாண்மை (தோக1) துறை, நாள் 9.2.2016.
2. இயக்குநர், தோட்டக்கலை(ம)மலைப் பயிர்கள் துறை அவர்களின் கடித எண்.பிபிஎஸ்3/2640/2015, நாள் 18.3.2016.

---

ஆணை:–

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கழிவு நீக்கம் செய்யப்பட்ட ஆறு பழைய வாகனங்களுக்கு பதிலாக Mahindra Bolero வாகனங்களை DGS & D-Rateல் நிர்ணயிக்கப்பட்ட விலையின்படி வாங்க வாகனம் ஒன்றுக்கு ரூ.5,92,161/– வீதமும், மற்றும் உதிரி பாகங்கள் மற்றும் பராமரிப்பு தொகை, பதிவு கட்டணம் ஆகியவற்றுக்காக ரூ.53,000/– வீதமும், ஆக மொத்தம் ஆறு வாகனங்களுக்கு ரூ.38,70,966/– ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தோட்டக்கலை (ம) மலைப் பயிர்கள் துறை இயக்குநரின் கடிதத்தில், மகிந்திரா மற்றும் மகிந்திரா, மும்பை

(த.பி.பா)

நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி (Proforma Invoice No.MKTG-/040316/043, நாள் 4.3.2016 ன்படி 1.3.2016 முதல் வாகனங்களுக்கான விற்பனை வரியை 4 சதவீதம் மத்திய அரசு அதிகரித்துள்ளதால், ஒரு வாகனத்தின் விலை ரூ.6,06,437/- என உயர்ந்துள்ளது என்றும், இதன்படி ஒரு வாகனத்திற்கு கூடுதலாக ரூ.14,276/- செலவு ஏற்படும் நிலையில், 6 வாகனத்திற்கு மொத்தம் ரூ.85,656/- கூடுதல் செலவினம் ஏற்படுகிறது என தோட்டக்கலை (ம) மலைப் பயிர்கள் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், 6 புதிய வாகனங்களின் உதிரி பாகங்களுக்குரிய தொகை ரூ.1,51,200/- சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப் பட்டுள்ளதாகவும், அரசாணையில் ஒரு வாகனத்தின் உதிரி பாகங்களுக்கு ரூ.30,000/- வீதம் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப் புள்ளியில் உதிரி பாகங்களுக்கான செலவினம் ரூ.25,200/- என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால், ஒரு வாகனத்திற்கு உதிரி பாகங்களைப் பொறுத்தவரை ரூ.4,800/- வீதம், 6 வாகனங்களுக்கு ரூ.28,800/- என்ற அளவில் தொகை சேமிப்பில் உள்ளது எனவும், வாகனத்தின் விலை கூடுதலான நிலையில், அதன் பொருட்டு தேவையான தொகை கூடுதல் ரூ.85,656/-இல் மேற்குறிப்பிட்ட சேமிப்புத் தொகை - ரூ.28,800 போக மீதம் ரூ.56,856/- தேவைப்படுவதாக தெரிவித்து, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 6 புதிய வாகனங்கள் வாங்க ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.38,70,966/-யைக் காட்டிலும் கூடுதலான தொகை ரூ.56,856/-ஐ ஒப்பளிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்க முடிவு செய்து, அவ்வாறே மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆறு புதிய வாகனங்கள் வாங்க ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.38,70,966/-ஐ காட்டிலும், தற்போது கூடுதலாக ஆகும் செலவினத் தொகை ரூ.56,856/- (ரூபாய் ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தாறு மட்டும் ) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி.4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.:-

"2401 - 00 பயிர் வளர்ப்பு - 119 தோட்டக்கலையும் காய்கறி பயிர் வளர்ப்பும் - பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் - JX மாவட்டங்களில் தோட்டக்கலை மேம்பாடு 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் "

(த.தொ.கு 2401 - 00 - 119 - JX 2110)

(த.பி.பா)

6. மேலே பத்தி-4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதி 2016-2017-ல் திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு ஒதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தோட்டக்கலை (ம)மலைப் பயிர்கள் துறை இயக்குநர், அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினத்தை 2016-17ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித் (வேளாண்மை) துறைக்கு அனுப்புமாறு தோட்டக்கலை (ம) மலைப் பயிர்கள் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை உள் (போக்குவரத்து) துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.27030/போ.வ.1/2016-1, நாள் 18.04.2016-லும் மற்றும் நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.37494 /நிதி (வேளாண்மை) / 2016, நாள் 22.07.2016-லும் பெற்று வெளியிடப்படுகிறது மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண். 480 (நானூற்று எண்பது) ஆகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலர்/ஆணையர், தோட்டக்கலை (ம) மலைப் பயிர்கள் துறை, சென்னை-5.
இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை-42.
முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை-18.
முதன்மை மாநில கணக்காயர் (G &SSA), சென்னை-18.
மாநில கணக்காயர் (தணிக்கை) (AAD), சென்னை -18.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் சென்னை-9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை - 8.

<u>நகல்</u>
பொது(மோட்டார் வாகன பராமரிப்பு) துறை சென்னை-9.
உள் (போக்குவரத்து)சென்னை-9.
நிதித்(வேளாண்மை/வ.செ.பொ.1 மற்றும் வ செ.பொ2) துறை, சென்னை-9.

(த.பி.பா)

மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர் சென்னை–9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் (ம) அரசு செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், வேளாண்மைத் துறை, சென்னை–9.

வேளாண்மை(அநமு–3)துறை சென்னை–9.

கணினி விவரத் தொகுப்பாளர், சென்னை – 9.

சம்பந்தப்பட்ட கோப்பு எண்.7065/தோ.க.1.1/2016

இருப்புக் கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/7/2016

பிரிவு அலுவலர்

24/7/16